**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.134/2020**

**இ.ம.எண்.07/2026**

1) ராசு

2) பொன்னுசாமி **...மனுதாரர்கள்/6,7 பிரதிவாதி**

**/எதிர்/**

பொன்னுசாமி (குடும்ப மேலாளர்) **..எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 07.04.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ரவிக்குமார் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/6 மற்றும் 7ம் பிரதிவாதிகளால் மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு வழக்கு விசாரணையை மீண்டும் திறக்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**2)** 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரின் தந்தையாவார். மேற்படி வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக, கடந்த 22.04.2022ம் தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட

ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இ.ம.எண்.5/2024ல் மனு தாக்கல் செய்து, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுவிட்டது. மனுதாரர்கள்/6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மேற்படி வழக்கில், ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு முன்பும், மனுதாரர்களால் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பும், எதிர்மனுதாரர்/வாதி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து, மற்ற பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்யப்படாமல் உள்ளது. எனவே, வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்ய மேற்படி வாதி தரப்பு வழக்கு விசாரணையை மீண்டும் திறக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) மேற்படி வழக்கு இன்று வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்க வாய்தா போடப்பட்டுள்ளது. வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி வழக்கை வாதி பக்கம் மீண்டும் திறக்க வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது. இல்லாவிட்டால் மனுதாரர்களுக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>

5) மனுதாரர்கள் மனுவில் கூறியிருக்கும் சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை, தவறானவை, கற்பனையானவை. எதிர்மனுதாரர்/வாதி உண்மையென ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் பொய். அவற்றை மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். இம்மனுவானது, சட்டப்படியோ பொருண்மைப்படியோ நிலைநிற்கத்தக்கதல்ல.

**6)** மனு பத்தி எண்.3ல் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் முற்றிலும் பொய்யாகும். உண்மையில், மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/6 மற்றும் 7ம் பிரதிவாதிகள், மேற்படி வழக்கின் நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கில் எதிர்கட்சி செய்யாமல் இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு, பின்பு கடந்த 15.07.2024 அன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

**7)** அதன் பின்னிட்டு, எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், கடந்த 12.03.2025 ஆம் தேதியன்று வா.சா.2 சாட்சி விசாரிக்கப்பட்டு, மேற்படி சாட்சியை 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பிலும், அதன் பின்னிட்டு கடந்த 05.04.2025 தேதியன்று இந்த மனுதாரர்கள்/6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, பின்பு எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டுவிட்டது.

**8)** கடந்த 15.07.2024ம் தேதியிலிருந்து 25.02.2026 தேதி வரை மனுதாரர்கள்/6 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பில், வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, தற்பொழுது இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது மனுதாரர்கள் தரப்பில் உள்ள வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தை தெளிவாக காட்டுகிறது.

**9)** மேலும், மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவை தாக்கல் செய்வதற்கும், ஏற்கெனவே வா.சா.1யை உரிய காலத்தில் குறுக்கு விசாரணை செய்யாததற்கும் தெளிவாக காரணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை. எனவே, மனுதாரர்களின் இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. இம்மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே, இம்மனுவானது எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:**

**10)** மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

**11)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்வு:**

**12)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர்/வாதி, மேற்படி அசல் வழக்கை மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராகவும் தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும், தாவா சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட ஆவணத்தை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்திட விளம்புகை பரிகாரத்திற்காகவும், மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் இந்த மனுதாரர்கள்/6, 7 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்புகள் அளித்தும் சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், அவர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் கடந்த 22.04.2022 அன்று ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், அதனைத் தொடர்ந்து, வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**13)** மேலும் வா.சா.1, 1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, கூடுதல் வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில், இந்த மனுதாரர்களால் இ.ம.எண்.5/2024 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் பேரில், இந்த மனுதாரர்களுக்கு எதிராக மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் கடந்த 15.07.2024 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்த மனுதாரர்களால் மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டு, அதனைத் தொடர்ந்து வாதி தரப்பில் வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவரது குறுக்கு விசாரணையானது, பிரதிவாதிகள் தரப்பில் முழுமையாக முடிக்கப்பட்டு, கடந்த 19.02.2026 அன்று வாதி தரப்பு சாட்சியமானது முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

**14)** அதனைத் தொடர்ந்து, கடந்த 03.03.2026 அன்று இம்மனுவானது மனுதாரர்களால் மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு வழக்கு விசாரணையை மீண்டும் திறக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு எதிராக மேற்படி அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், அதன் பின்பு வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டது என்றும், அதன் பின்பே இந்த மனுதாரர்களால் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பில் கூடுதல் சாட்சிகள் விசாரிக்கப்பட்டதாகவும், இந்நிலையில் வா.சா.1யை இந்த மனுதாரர்கள்/6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாமல் போய்விட்டதால், வா.சா.1யை மீண்டும் அழைத்து மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ள, மேற்படி

அசல் வழக்கில் வாதி தரப்பு வழக்கு விசாரணையை மீண்டும் திறப்பது அவசியமானது என்று வாதிடப்பட்டது.

**15)** மாறாக, எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி மனுதாரர்களால் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்பட்டு, மேற்படி அசல் வழக்கை காலதாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்து எதிர்மனுதாரரை அலைக்கழித்து வருவதாகவும், இம்மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், வா.சா.1ன் குறுக்கு விசாரணையை உரிய காலத்தில் செய்யாமல் ஒருதலைபட்சமாக இருந்துவிட்டு, தற்போது ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட்ட பின்பும், அதிகப்படியான காலதாமதத்திற்கு பின்பும், எவ்வித காரணமும் சொல்லப்படாமல் தற்போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்திட வேண்டி வாதிடப்பட்டது.

**16)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்கையில், வா.சா.1 சாட்சி விசாரணைக்கு முன்பே இந்த மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினர்களாக இருந்து அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், வா.சா.1ன் விசாரணை முழுமையாக முடிக்கப்பட்ட பின்பு வாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில், இந்த மனுதாரர்கள் அவர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய மனு தாக்கல் செய்து அம்மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**17)** இவ்வாறு இருக்கும் நிலையில், மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பில் கூடுதல் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சியமானது முழுமையாக

முடிக்கப்பட்ட உடன்காலிலே, வா.சா.1யை இந்த மனுதாரர்கள்/6, 7 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்ய, மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு வழக்கு விசாரணையை மீண்டும் திறக்கக் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க மனுதாரர்களால் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாகவும், நம்பத்தகுந்ததாகவும் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணங்களும், முகாந்திரமும் உள்ளதாகவும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**18)** மேலும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் போதுமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டு, சாட்சிகளை விசாரணை செய்வதன் மூலமும், குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும், ஆவணங்கள் தாக்கல் செய்வதன் மூலமும், தகுந்த வாய்ப்புகள் அளிக்கப்பட்டு முழுமையான விசாரணைக்கு பின்பு மட்டுமே இந்நீதிமன்றத்தால் இருதரப்பினருக்கும் நீதி பரிபாலனமானது வழங்கமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேலும், மனுதாரர்கள் தரப்பில் எவ்வகையான காலதாமதமும் ஏற்படவில்லை என்பதை வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்ததின் அடிப்படையில் அறிய முடிகின்றது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மாறாக, இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கே அதிகப்படியான இழப்பு ஏற்பட்டுவிடும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவு:**

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. மேற்படி அசல் வழக்கில், வாதி தரப்பு

வழக்கு விசாரணையானது மீண்டும் திறக்கப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.22 16:37:41 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.22 16:37:47 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**